ரெடிங் தமிழ் கல்விக்கூடம்

Reading Tamil School

2019/2020

# வளர் தமிழ் 6

## பயிற்சி 7

பெயர் ____________________________________________

www.readingtamilschool.co.uk

admin@readingtamilschool.co.uk

1. **பேச்சுப் பயிற்சி**

பின்வரும் தலைப்புத் தொடர்பாக 2 மணித்துளிகள் தொடர்ச்சியாகப் பேசவும்.

***‘ தைப்பொங்கல் ’***

2. **வாசித்தல்**

மாந்தராகப் பிறந்த நாம் பிறர் எமக்குச் செய்யும் உதவியை என்றுமே மறந்து விடக்கூடாது. நாங்கள் என்றுமே தனித்து வாழமுடியாது. எமது தேவைகளை நிறைவேற்ற நாம் பலரது உதவிகளையும் நாட வேண்டியிருக்கும். இவ்வாறு பிறர் எமக்குச் செய்யும் உதவிகளை நாம் என்றும் நினைத்திருக்க வேண்டும். ஆனால் யாராவது எமக்குத் தீங்கு செய்தால் அதனை நாம் உடனே மறந்து விடவேண்டும். இவ்வாறு வாழ்வதே நல்ல பண்பாகும். இதனையே பொய்யாமொழிப் புலவரான திருவள்ளுவரும்

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று

எனக் கூறியுள்ளார். எனவே நாம் தீயனவற்றை மறந்து நல்லனவற்றையே செய்வோம். ஒருவருக்கொருவர் உதவி செய்து ஒற்றுமையாக வாழ்வோம்.

.

3. **பாடநூற் சொற்கள் (பாடம் 7)**

எளிமை - Simplicity

பண்பு - Curtesy / Quality

கவிஞர் - Poet

ஈர்க்கப்படுதல் - Inspired

வியப்பு - Surprised

இயற்றுதல் - Formulation

பெருமை - Glory / Greatness

முத்திரை - Stamp / Seal

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

**4. பொருத்தமான விடையைத் தேர்வு செய்வோம்.**

- எதிர்கால இடை நிலைகள்.

  கின்று, கிறு     த், ட், ற், இன்

  த், ட், வ்     ப்,வ்

- 'மங்கயராய்ப் பிறப்பதற்கே...' என்ற பாடலை எழுதியவர் ________________.

  ஔவையார்     இளங்கோவடிகள்

  தேசவிநாயகம்பிள்ளை     பெருஞ் சித்தனார்

- தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துகளின் எண்ணிக்கை________________.

  216     247     30     18

- பின்வருவனவற்றுள் ஒன்றன்பால்

  முயல்கள்     மாணவி     மான்     தம்பி

- 'ஒருவன் தன் நிலையிலிருந்து தாழாதிருப்பதும் தாழ்வு வரும்போது உயிர்வாழாதிருப்பதும்' ____________________ ஆகும்.

  மனம்     மானம்     பண்பு     கலாசாரம்

- பழமொழி: கண்பார்த்தால் ____________________ செய்யும்.

  கால்     கை     வாய்     காது

- எல்லாளனுடன் போர் தொடுத்தவன்

  காக்கவனத்தீசன்     சங்கிலியன்

  சூரத்தீசன்     துட்டகெமுனு

- கதிரவன் என்பதைக் குறிக்கும் வேறு சொல்

விண் மதி பகலவன் திங்கள்

- இலங்கைத்தீவு முழுவதும் ஓர் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்ட ஆண்டு

1833 1505 1815 1948

- பின்வரும் எழுத்துகளில் உயிர்மெய் எழுத்து________________.

ப் த ஐ ம்

- யாழ் நூலகம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

1948 1981 1933 1910

- மாங்காய் என்பதை பிரித்தால்

மாங்+காய் மாக்+காய்
மாம்+காய் மா+காய்

- ஒரு செயல் நடந்து கொண்டிருப்பதைக் குறிக்கும் காலம்

எதிர்காலம் நிகழ்காலம்
இறந்தகாலம் முடிந்தகாலம்

- கண்ணாடி ____________________ என மின்னியது

பளபள மளமள சலசல கடகட

- 'புலவர் பாடிப் பரிசு பெற்றார்' இங்கே வந்துள்ள செயப்படுபொருள்

புலவர் பாடி
பரிசு பெற்றார்

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ்

5. **இலக்கண - மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

- மெல்லின மெய்யெழுத்துகளைத் தருக.

___

___

- பின்வரும் சொற்களின் திணை, பால் என்பவற்றைத் தருக.

| | திணை | பால் |
|---|---|---|
| மலை | | |
| சேவல் | | |
| காடுகள் | | |
| காகம் | | |
| வேடர்கள் | | |
| வீடு | | |
| ஔவையார் | | |
| சிறுவர் | | |

- தமிழில் உள்ள முதலெழுத்துகள் எத்தனை?

___

___

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 6

6. **பாட வினாக்களுக்கு விடை தருக.**

- தமிழீழத்தின் பரப்பளவு எத்தனை சதுர கிலோமீற்றர்?

- துட்டகெமுனுவும் பௌத்தபிக்குமாரும் போருக்கான முழக்கமாக எதை முன் வைத்தனர்?

- தொழிற்பாடல்கள் எப்போது பாடப்படும்?

- மூட ஆமை என்ற பாடத்தில் கொக்குகள் ஆமையிடம் மறந்திடாதே எனக் கூறியது எதை?

றெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 6

7. **தமிழில் மாற்றி எழுதுவோம்.**

- She closed her door slowly.

- I returned the book to the library.

- The pillows were on the bed.

- I bought a beautiful dress yesterday.

- I am going to the temple tomorrow.

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 6